**செய்தி வெளியீடு எண்: 822** **நாள்: 22.11.2019**

**செய்தி வெளீயீடு**

அரசு போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகள் குறித்து போக்குவரத்துத் துறையின் முதன்மைச் செயலாளர் டாக்டர் B.சந்திரமோகன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இயக்குநர் குழு கூட்டம் (Board Meeting) 18.11.2019 முதல் 22.11.2019 வரையில், தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை), அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் (சென்னை), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம், சேலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி, மதுரை மற்றும் கும்பகோணம் உள்ளிட்ட எட்டு போக்குவரத்துக் கழகங்களின் மேலாண் இயக்குநர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 110 விதியின் கீழ், சட்டமன்ற பேரவையில் அறிவிக்கப்பட்டுள்ள புதிய அறிவிப்புகளை செயல்படுத்துதல், மேலும் போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகள், செலவீனங்களை குறைத்து நிதி நிலையை மேம்படுத்துதல், பணியாளர்களின் பதவி உயர்வு, பணியாளர்கள் மீதான குற்றச்சாட்டுகளை விரைந்து முடித்தல், பணிமனைகளை பழுது நிவர்த்தி செய்தல், பழைய பேருந்துகள் மற்றும் அலுவலக வாகனங்களை கழிவு செய்தல், சட்டமன்றத்தில் போக்குவரத்துத்துறை மானிய கோரிக்கையில், மாண்புமிகு போக்குவரத்துத்தறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள புதிய அறிவிப்புகளை விரைந்து செயல்படுத்துதல், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட புதிய பேருந்துகளின் இயக்கம் மற்றும் வசூல் நிலவரம், உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் குறித்து விரிவாக கலந்தாலோசிக்கப்பட்டன.

இறுதியாக, தலைமை வகித்த போக்குவரத்துத்துறை முதன்மை செயலாளர் தமது உரையில் ‘‘மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் நமது அனைத்து போக்குவரத்துக் கழகங்களையும் மேம்படுத்திட வேண்டும் என்கின்ற உயரிய நோக்கத்தில், கடந்த மூன்று ஆண்டுகளில் 1,442 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4,802 புதிய பேருந்துகள், போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கப்பட்டு, இயக்கப்பட்டு வருகிறது. இப்பேருந்துகளில் குளிர்சாதன வசதி, கழிப்பறை வசதி உள்ளிட்ட தற்போதைய கால கட்டத்திற்குத் தேவையான அதிநவீன தொழில்நுட்ப வசதியுடன் கூடிய பேருந்துகள் பொதுமக்களால் பெரிதும் விரும்பப்படுகிறது. இதனை நல்லமுறையில் பராமரித்து வருவாயினைப் பெருக்கிட வேண்டுமாறு கேட்டுக்கொண்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அண்மையில் சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ், போக்குவரத்துக் கழகங்களுக்கு நடப்பு நிதியாண்டில் 600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2,000 புதிய பேருந்துகள் வாங்கப்படும் என்றும், அரசு நிறுவனங்களின் நிதி ஆதாரம் மூலம் 10 அரசு போக்குவரத்துக் கழகப் பணிமனைகள் ரூ.50 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்தி நவீனப்படுத்தப்படும் என்றும் அறிவித்துள்ளார்கள். மேலும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் நடப்பு நிதியாண்டின் துணை மதிப்பீட்டில், போக்குவரத்துக் கழகங்கள் மேம்பாடு மற்றும் பணியாளர்களின் ஓய்வுகாலப் பலன்கள் வழங்குவது, பள்ளி மாணவர்களுக்கு இலவச பேருந்து பயண அட்டை வழங்குவது உள்ளிட்ட பல்வேறு இனங்களுக்கு ஏறத்தாழ 1,912 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து அறிவித்தார்கள். அந்த வகையில், எட்டு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற 6,283 பணியாளர்களுக்கு, 1,093 கோடி ரூபாய்க்கான ஓய்வூதிய பணப்பயன்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கி தொடங்கி வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் நேரடியாக சென்று வழங்கினார்கள்.

தமிழ்நாடு முழுவதும் உள்ள 321 பணிமனைகளில், பணிபுரியும் 1.27 இலட்சம் பணியாளர்களின் நலன்களை மேம்படுத்திட, பணிமனைகள் மற்றும் பணியாளர்கள் தங்கும் அறைகள் குறித்து உரிய ஆய்வும், பாதுகாப்பு தணிக்கையும் (Safety Audit) மேற்கொள்ளுமாறு ஏற்கனவே உத்தரவிடப்பட்டு, அதன் அடிப்படையில், ஆய்வுப் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. மேலும், சென்னையில் உள்ள 33 பணிமனைகளில், 16 பணிமனைகள் (சீர்மிகு நகரம், Smart City) முதற்கட்டமாக மேம்படுத்தப்பட உள்ளது.

இந்த நிலையிலும், பல்வேறு செயல்திறன்களுக்காக அகில இந்திய அளவிலான சாலைப் போக்குவரத்துக் கழகங்களின் கூட்டமைப்பின் சார்பில் வழங்கப்படும் விருதுகளை, கடந்த 2011–12–ஆம் ஆண்டிலிருந்து நமது போக்குவரத்துக் கழகங்கள் அதிக எண்ணிக்கையில் பெற்றுவருவது பாராட்டுக்குரியது. தற்போது, 2017–18ஆம் ஆண்டிற்கான விருது வழங்கும் விழாவில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் 9 விருதுகளை பெற்றுள்ளது, மிகுந்த பாராட்டுக்குரியது மட்டுமின்றி, அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் அர்ப்பணிப்புப் பணிக்கு கிடைத்த வெகுமதி என்றால் அது மிகையாகாது. இதற்காக பணியாற்றிய அனைத்து பணியாளர்களையும் மற்றும் அலுவலர்களையும் நான் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மாநகர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில், மாற்றுத் திறனாளிகளுக்கென 10 பேருந்துகள் குறிப்பிட்ட வழித்தடங்களில் இயக்கப்பட்டு வருகின்றன. தற்போது வடிவமைக்கப்படும் புதிய பேருந்துகளில், மாற்றுத்திறனாளிகள் தங்கள் சக்கர நாற்காலியுடனே பேருந்தில் ஏறி பயணம் செய்திட ஏதுவாக வடிவமைக்கப்பட்டு கூடிய விரைவில் இயக்கப்பட உள்ளது.

நாட்டின் சுற்றுச்சூழலை பாதுகாக்கின்ற வகையில், தமிழ்நாட்டில் முதன்முறையாக, மின்சாரத்தினால் இயங்கும் பேருந்துகளை அதிக அளவில் இயக்கிடும் பொருட்டு, நடுவண் அரசின் Fame India –II திட்டத்தின் கீழ் கோவை, மதுரை, திருச்சி, வேலூர், தஞ்சாவூர் உள்ளிட்ட மாநகரங்களில் 525 மின்சாரப் பேருந்துகளை வாங்கி இயக்கிட ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. மாநிலங்களுக்கான மின்சாரப் பேருந்துகளின் ஒதுக்கீட்டில் தமிழகமானது 525 மின்சாரப் பேருந்துகள் ஒதுக்கீடு பெற்று, இந்தயாவிலேயே தமிழகம் நான்காவது மாநிலம் என்கின்ற பெருமையைப் பெற்றுள்ளது.

அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு மேலும் கூடுதலான பேருந்துகளை வாங்கிடும் பொருட்டு, நிதி நிலை அறிக்கையில், ஜெர்மன் வளர்ச்சி வங்கி (KfW) நிதி உதவியுடன் 10,000 புதிய BS-VI தரத்திலான பேருந்துகளும், 2,000 மின்சாரப் பேருந்துகளும் வாங்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை செயல்படுத்திடும் நோக்கில், முதற்கட்டமாக 1,580 கோடி ரூபாய் (203 யூரோ மில்லியன்) மதிப்பீட்டில், 500 மின்சாரப் பேருந்துகளும் மற்றும் BS-VI தரத்திலான 2,213 புதிய பேருந்துகளும் வாங்குவதற்கான திட்ட ஒப்பந்தமானது (Project Agreement) 26.09.2019 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் கையெழுத்தானது. அதற்கான பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மேலும், பொது மக்களின் சேவைகளில் ஈடுபட்டுள்ள நடத்துநர்கள், ஓட்டுநர்கள் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து, அவற்றை உடனுக்குடன் களைந்திட ஆவன செய்யுமாறு மேலாண் இயக்குநர்களை கேட்டுக் கொண்டார். அந்த வகையில், பொதுமக்கள் மற்றும் பணியாளர்களின் கோரிக்கை மனுக்களை பெற்று அவற்றை உடனுக்குடன் சரி செய்திடுமாறும் கேட்டுக் கொண்டார்''.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**